# அமெரிக்காவின் சர்வாதிகாரமும் - பிரதமர் மோடியின் மௌனமும்!

வல்லரசு என்று கூறிக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் அதிபராக பொறுப்பேற்ற நாள் முதல் டிரம்ப் இரவு உறங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் வரி வரி என்று வாய்திறந்தால் வரி பைத்தியம் பிடித்து உலகின் பெரும்பான்மை நாடுகளை வரிவிதிப்பை வைத்து மிரட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ளார். ஜார்ஜ் வாஷிங்டன், ஆபிரஹாம் லிங்கன், ஒபாமா, கென்னடி, நிக்சன், கிளிண்டன், ரீகன், ரூஸ்வெல்ட், ஜார்ஜ் புஷ் என எத்தனையோ ஜாம்பவான்கள் அமர்ந்திருந்து கண்ணியம் காத்த பதவியில் அமர்ந்து கொண்டு சர்வாதிகாரியாக மாறி செயல்பட்டு அமெரிக்க ஜனநாயகத்தையே அழித்தொழித்து சர்வாதிகார மரணக்குழிக்குள் தள்ளப்பார்க்கிறார்.

இங்கிலாந்தின் மீது வரி, சீனா மீது வரி, இந்தியா மீது வரி, பிரான்ஸ், ஜெர்மனி மீது வரி என்று அவர் வரி விதிக்கப் போவதாக அறிவித்த நாடுகளின் பட்டியல் மிகவும் பெரியது.

அதற்கும் கொஞ்சம் அதிகப்படியாகச் சென்று இந்திய பொருளாதாரம் செத்துப் போன பொருளாதாரம் என்றும் கிண்டல் அடித்துள்ளார். அவரது நோக்கமெல்லாம் இந்தியா ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்கள் வாங்கக் கூடாது. அதேபோல் கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது. இதை டிரம்ப் சொல்கிறேன், மோடி கேட்க வேண்டும் என்பதே அவர் விதிக்கும் நிபந்தனை.

ஆனால் அதே வேளையில் அமெரிக்கா தனக்குத் தேவையான முக்கிய கனிமங்கள், வேதியியல் பொருட்கள், அணுஆயுதத்திற்கு தேவையான அதிமுக்கியப் பொருட்களை தற்போதும் ரஷ்யாவிடமிருந்து பெற்று வருகிறது. அதேபோல் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு போன்றவைகள் ரஷ்யாவிடமிருந்து இன்றுவரை வாங்கி வருகிறது. US actions "extremely unfortunate and unfair, unjustified and unreasonable" என்று 07.08.25 தேதியில் வந்த ஹிந்து ஆங்கிலப் பத்திரிகை எழுதியுள்ளது.

தனக்கு தேவையானதை அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும் ரஷ்யாவிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். ஆனால் இந்தியா மட்டும் வாங்கக் கூடாது என்று டிரம்ப் சொல்வது எந்த விதத்தில் நியாயம்? இதனால் தற்போது அமெரிக்காவில் 10.98 டாலராக இருந்த ஆடையின் விலை 11.98 டாலராகவும், 6.98 ஆக இருந்த குழந்தைகள் ஆடை விலை 10.98 டாலராகவும், 19.97 டாலராக இருந்த புத்தகப் பையின் விலை 24.97 டாலராகவும் உயர்ந்துள்ளது என்று அமெரிக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதற்கு ஒரே தீர்வு இந்தியா மீது 50 விழுக்காடு வரி என்பதை டிரம்ப் உடனே கைவிட வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

இந்தியா பல நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்கிறது. 85 விழுக்காடு இந்தியா கச்சா எண்ணெயை பிற நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. ஆரம்பத்தில் 2 விழுக்காடுதான் ரஷ்யாவிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தது. தற்போது விற்கப்படும் விலையை விட 20 டாலர் குறைவாக ரஷ்யா கச்சா எண்ணெயை தர தயாராக இருக்கும்போது இந்தியா அதைப் பயன்படுத்திக் கொள்வதுதானே நியாயமாக இருக்கும். அதன் அடிப்படையில் தற்போது ரஷ்யாவிடமிருந்து 40 விழுக்காடு கச்சா எண்ணெய் இந்தியா இறக்குமதி செய்கிறது. இந்திய நாட்டு மக்களுக்கு எது பயன் தருமோ அதைத்தான் ஆளும் அரசு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் தான் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கப்படுகிறது. அதுமட்டும் அல்ல அமெரிக்க விவசாயம் மற்றும் பால் பொருட்களையும் இறக்குமதி செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று பிரதமர் மோடி அரசு தற்போது கூறியுள்ளது.

வி.பி.கலைராஜன்
கழக இலக்கிய அணிச் செயலாளர்



இந்தியா மக்கள் தொகை அதிகம் மிக்க உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. இதை நன்கு அறிந்திருக்கும் டிரம்ப் ஏதோ இந்தியா அடிமை சாசனம் அமெரிக்காவிடம் எழுதிக் கொடுத்துள்ளதைப் போல் டிரம்ப் சொல்வதைத் தான் இந்தியா கேட்க வேண்டும் என்று மிரட்டுவது 140 கோடி இந்திய மக்களையும் மிரட்டுவதற்கு சமமாகும்.

சர்வாதிகாரிகளாக இருந்த ஹிட்லருக்கும், முசொலினிக்கும், இடிஅமினுக்கும், மஹிந்த ராஜபக்சேவுக்கும் அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? சர்வாதிகாரியின் முடிவை சரித்திரம் இன்றும் சொல்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கை முற்றிலும் தோல்வி அடைந்து விட்டது. பக்கத்தில் இருக்கிற நம்மால் தனி நாடான வங்காளதேசம் இன்று சீனாவுடன் உறவு வைத்துக் கொண்டு நம்மை சீண்டிப் பார்க்கிறது. முரண்டு பிடித்த மாலத்தீவு இப்போது பணம் கொடுத்து மோடி சரி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இலங்கை ஏற்கனவே சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்று விட்டது. நேபாளமும் நமக்கு சரியாக இல்லை. பாகிஸ்தான் நிரந்தரப் பகை நாடாகவே உள்ளது. பயங்கரவாதச் செயலை நிறுத்தும் வரை சிந்து நதி நீரை பாகிஸ்தானுக்கு தரமாட்டோம் என்று அறிவித்தது இந்தியா. உடனே சீனா பிரம்மபுத்திரா நதிக்கு குறுக்கே திபெத் அருகே தண்ணீர் இந்தியாவிற்கே வராத அளவிற்கு பல லட்சம் கோடி மதிப்பில் உலகின் மிகப்பெரிய அணையை கட்ட ஆரம்பித்துவிட்டது. இது பாகிஸ்தான் கூறி சீனா எடுத்த நடவடிக்கை ஆகும்.

இராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் கிழக்காசிய நாடுகள் அனைத்தும் தமிழர்கள் கட்டுப்பாட்டில் இருந்ததை வரலாறு கூறுகிறது. ஆனால் கிழக்காசிய நாடுகள் தாய்லாந்துகம்போடியா இடையே திடீர் போர் ஏற்பட்டது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு முதலில் இந்தியாவிற்குத் தான் உள்ளது. ஆனால் அந்தப் போரையும் அமெரிக்கா தலையிட்டு நிறுத்துகிறது. நமது உரிமையை நாம் விட்டு விட்டோம்.

சோவியத் யூனியனாக இருந்தபோது ரஷ்யா அதில் முக்கிய நாடாக இருந்தது. 1962 சீனாவுடன் நடந்த போரிலும் அதன் பிறகு பாகிஸ்தானுடன் நடந்த சில போர்களிலும், கார்கில் போரிலும் இந்தியாவிற்கு ரஷ்யாதான் பாதுகாப்பாக இருந்துள்ளது. அமெரிக்கா என்றுமே நமக்கு எதிராக பாகிஸ்தானுக்கு ஆதரவாக மற்றும் பலகோடிகளுக்கு ஆயுதங்களும் வழங்கி வருகிறது. வங்காளதேசப் பிரிவின் போது நடந்த பாகிஸ்தானுடனான போரில் பாகிஸ்தான் விமானங்கள் பெட்ரோல் நிரப்பிக் கொள்ள (அதாவது இந்தியாவை தாக்கும் விமானங்கள்) அனுமதி அளித்தது அன்றைய இலங்கை அரசு. அப்போதும் அமெரிக்கா பாகிஸ்தானுக்குத்தான் ஆதரவு தெரிவித்தது. தற்போதும் பாகிஸ்தானில் சக்சா எண்ணெய் உற்பத்திச் செய்ய அமெரிக்கா உதவிட உள்ளதாக அறிவித்துள்ளது.

இப்போது பிரதமர் மோடி அமெரிக்காவுடன் சுமூக உறவு இருப்பதைப் போல் காட்டிக் கொள்ள முயல்கிறார். ஆனால் ட்ரம்ப் ஜி7 மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மோடியிடம் பேசக்கூட விரும்பிடாமல் தவிர்த்தார். அதேவேளையில் டிரம்ப் பாகிஸ்தான் ராணுவ தளபதி முனீருக்கு மதிய விருந்து வைத்து மகிழ்ந்துள்ளார். இதற்குப் பிறகும் மோடி அமெரிக்காவை நம்புவது ஏன்? பயமா? அல்லது பதட்டமா?

இந்தியா – பாகிஸ்தான் போரை ட்ரம்ப் தான் நிறுத்தியதாகவும் பாகிஸ்தான் அணு ஆயுதங்களை ஏவத் தயாராக இருந்ததாகவும் கிட்டத்தட்ட 35 முறை கூறிவிட்டார். இதற்குப் பதில் சொல்ல நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ள வேண்டிய பிரதமர் மோடி வெளிநாடு சுற்றுப்பயணம் செல்கிறார். ஒரே ஒருநாள் மட்டும் பதில் சொன்னார். அதில் கூட கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்ற கட்சிகளின் எம்.பி.களும் எழுப்பிய டிரம்ப் பேசியது சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு கடைசி வரை மோடி நேரடியாக பதில் சொல்லவில்லை.

ஏன்? உங்கள் வீரமெல்லாம் அப்பாவி சிறுபான்மை மக்களையும் பட்டியலின மக்களையும் தாக்குவதில்தான் உள்ளதா? மற்றொன்று செய்கிறீர்கள். உங்களுக்கு பிடிக்காத மற்ற கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி தராமல் முடக்கச் செய்வது. அதுவும் தமிழ்நாட்டின் மீது அதீத அக்கறை. அப்படிப் பட்ட நிலையிலும் கிட்டத் தட்ட அமெரிக்கா இந்தியாவிற்கு எதிராக செய்யும் வேலையைத்தான் மோடி அரசும் தமிழ்நாட்டிற்கு எதிராக செய்து வருகிறது. ஆனாலும் தனது மதிநுட்ப நிர்வாகத் திறனால் தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாட்டை பொருளாதாரத்தில் 11.19 விழுக்காடாக உயர்த்திக் காட்டியுள்ளார்.

டிரம்பை எதிர்த்து நாடாளுமன்றத்தில் ஒரு வார்த்தைப் பிரதமர் மோடி பேசாதது ஏன்? வாஜ்பாய் பிரதமராக இருந்த போது 1999–ல் பொக்ரான் அணுகுண்டு வெடித்தது இந்தியா. 5000க்கும் மேற்பட்ட அணுகுண்டுகளை வைத்திருக்கும் அமெரிக்கா இந்தியா பொக்ரான் அணுகுண்டை வெடித்தது தவறு என்று இந்தியா மீது பொருளாதாரத் தடை விதித்தது. அன்றைக்கு பா.ஜ.க. தலைவர்கள் அமெரிக்காவை எதிர்த்து ஒருவரும் குரல் எழுப்பவில்லை. தமிழ்நாட்டிலிருந்துதான் அமெரிக்காவைக் கண்டித்து குரல் எழுப்பப்பட்டது.

தற்போது நடந்து முடிந்த இந்தியா – பாகிஸ்தான் போரில் வென்ற இந்தியாவை ஆதரித்து மிகப் பெரிய பேரணியை சென்னையில் நடத்தி தமிழ்நாடு என்றும் தேசத்திற்கு துணை நிற்கும் என்று காட்டிய வரும் முதல்வர் தளபதி அவர்கள் மட்டும்தான். இந்தியாவில் பா.ஜ.க. முதல்வர்கள் உட்பட வேறு எந்த முதல்வர்களாவது இப்படி செய்தார்களா? கடந்த காலத்திலும் போருக்கு அதிக நிதி வழங்கியவரும் இந்தியாவிலேயே தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

ஈராக் –அமெரிக்கா போர் நடந்த போது இந்தியத் தூதரகம் மீது அமெரிக்க குண்டு விழுந்தது சிலர் படுகாயம் அடைந்தனர். ஆனால் அதற்கு அன்றைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இந்தியாவிடம் ஒரு மன்னிப்புக் கூட கேட்கவில்லை. அன்றைய ஒன்றிய அரசு அதனைக் கண்டிக்கவும் இல்லை. ஆனால் அடுத்த நாள் சீனத் தூதரகத்தின் மீது அமெரிக்க குண்டு விழுந்தது. சேதம் ஒன்றும் இல்லை. ஆனாலும் அமெரிக்கா சீனாவிடம் உடனே மன்னிப்புக் கேட்டது.

இப்படி இந்தியாவை அமெரிக்கா அலட்சிய படுத்தியதை பற்றிக் கூற இன்னும் சில சம்பவங்கள் இருக்கின்றன. என்றைக்கு இந்திய குழந்தைகள், கர்ப்பிணிகள், பெண்கள் என்று கொஞ்சம் கூட மனிதநேயம் இல்லாமல் கைவிலங்கிட்டு வர்த்தக விமானத்தில் நிற்க வைத்து கொண்டு வந்தார்களோ அன்றைக்கே பிரதமர் மோடி அழுத்தமாக அமெரிக்காவைத் தட்டிக் கேட்டிருந்தால் இன்று டிரம்ப் நம்மை வரிவிதிப்போம், ரஷ்யாவிடம் உறவைத் துண்டித்துக் கொள் என்று மிரட்ட மாட்டார்.

இதில் வேதனை என்னவென்றால் ரஷ்யாவிடமிருந்து இரண்டரை ஆண்டுகளாக மிகக் குறைந்த விலைக்கு கச்சா எண்ணெய் வாங்கும் ஒன்றிய மோடி அரசு மக்கள் பயன்பெறும் வண்ணம் பெட்ரோல் டீசல் விலையை ஒரு பைசாக் கூட குறைக்கவில்லை. ரஷ்யாவிடம் வாங்கிய எண்ணெய் மூலம் யூரோ ஸ்டாட் வெளியிட்ட அறிக்கையின் படி சுமார் 100 பில்லியன் டாலர் இந்தியா சேமித்துள்ளது. இந்த பணம் யார் கையில் போய் சேர்கிறது? ஆனால் இந்தியாவின் கடனோ குறைந்ததாக கூறப்படவில்லை.

டிரம்பின் நடவடிக்கைக்கு அமெரிக்காவிலேயே எதிர்ப்பு வலுத்து வருகிறது. ஐ.நா. முன்னாள் அமெரிக்கா தூதர் நிக்கி ஹேலி என்பவர் இந்தியா மீது டிரம்ப் வரி விதிப்பதைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். ஏற்கனவே சிறிய நாடான வியாட்நாமில் அமெரிக்கா நடத்தியப் போர் அதனால் ஒரு பெண் குழந்தை உடையில்லாமல் ஓடி வந்தக் காட்சி பத்திரிக்கைகளில் வெளிவர அதைப் பார்த்து அமெரிக்கா மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பால் அமெரிக்கா போரை நிறுத்தியது வரலாறு. பிரதமர் மோடியே நீங்களும் வியாட்நாமின் ஹோ சி மின் போல் உறுதியாக நில்லுங்கள். இழப்பது உயிர் என்றாலும் காப்பது இந்தியர்களின் தன்மானம். பத்துக் கோடித் தமிழர்கள் எங்கள் முதல்வர் தலைமையில் இந்தியாவைக் காக்க களமிறங்க தயாராக இருக்கிறார்கள். ஜான்சி ராணிக்கு 72 ஆண்டுகளுக்கு முன்பே ஆங்கிலேயன் பிடித்த நாட்டைப் போரிட்டு திரும்ப மீட்டவர் இந்தியாவிலேயே ஒருவர்தான். அவர் வீரத்தமிழச்சி வேலு நாச்சியார்தான் என்பதை மறவாதீர்.

1.தாய்லாந்துகம்போடியா போர், 2.இஸ்ரேல் – ஈரான் போர், 3.காங்கோ ஜனநாயகக் குடியரசுரு வாண்டா போர், 4.இந்தியாபாகிஸ்தான் போர், 5.செர்பியாகொசோவா போர், 6.எகிப்துஎத்தியோப்பியா போர் என்று எல்லாப் போர்களையும் டிரம்ப் தான் நிறுத்தியதாக தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்.

இந்தியா ரஷ்யாவிடம் பேரல் 60 டாலருக்கு குறைந்த விலையில் வாங்கி வருகிறது. இதை உடனடியாக இந்தியா நிறுத்த வேண்டும் என்று 50ஙீ வரி விதித்துள்ளார். மிகப்பெரிய ஜனநாயக நாட்டை அமெரிக்கா அளவிற்கு இல்லையென்றாலும் அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடு இந்தியா. அணுஆயுதம் வைத்துள்ள 9 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அமெரிக்க மக்கள் தொகை இந்திய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு கூடக் கிடையாது.

அமெரிக்காவின் லட்சணம் இப்படியிருக்க இந்தியா அதிக விலை கொடுத்து வேறு நாடுகளிடம்தான் கச்சா எண்ணெய் வாங்க வேண்டும் என்று சொல்ல அமெரிக்காவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இந்தியா என்ன அமெரிக்காவின் அடிமை நாடா?

டிரம்ப் கிட்டதட்ட 35 முறை இந்தியாபாகிஸ்தான் போரை தான் தான் நிறுத்தினேன் என்று கூறிவிட்டார். மேலும் கூறுவார். அதற்கு தக்க பதில் பிரதமர் மோடி மக்களுக்குத் தர வேண்டும் என்று தி.மு.க எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புகிறார்கள். குறிப்பாக ஆ.ராசா ஒன்றிய அமைச்சராக இருந்தவர், திருச்சி சிவா மூத்த உறுப்பினர் மற்றும் கனிமொழி கருணாநிதி போன்ற கழக எம்.பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்குக் கூட பிரதமர் மோடி அமெரிக்கா போரை நிறுத்தவில்லை என்று துணிச்சலுடன் இதுவரைக் கூறவில்லை ஏன்?

அமித்ஷாதான் பதில் தருகிறார். அமெரிக்க அதிபருக்கு இந்திய பிரதமர் மோடியோ பதில் சொல்ல மறுக்கிறார். நாடாளுமன்றத்திற்கும் வர மறுக்கிறார். இதற்குப் பெயர் ஆணவமா? அலட்சியமா? அச்சமா? ஆனால் ஒன்று மட்டும் நிகழ்ந்தது இந்திய மக்களுக்கு அவமானம்".

பல போர்களை நிறுத்தியதாக கூறும் டிரம்ப் இஸ்ரேல்ஈரானுக்கு இடையே நடந்த போரில் ஈரான் அணுஆயுத கிடங்குகளில் ஏவுகணைகளை வீசியது ஏன்? அயத்துல்லா கமேனியை கொல்லப் போவதாக மிரட்டியது நியாயமா? பல கோடி மதிப்பிலான ஆயுதங்களை பாலஸ்தீனர்களை கொன்றொழிக்க இஸ்ரேலுக்கு கொடுத்து வருகிறாரே டிரம்ப் இவருக்கு போரைப் பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

டிரம்ப் ஒரு வார்த்தை சொன்னால் போதும் நாளையே இஸ்ரேல் போர் நிறுத்தப்படும். இவ்வளவு போரை நிறுத்திய திறன்மிக்க டிரம்ப் இதை ஏன் நிறுத்த மறுக்கிறார்? காசாவில் மக்கள் குண்டுக்கு பலியாகி சாவது லட்சத்தை நெருங்கி விட்டது. ஆனால் உணவு தராமல் தண்ணீர் தராமல் பட்டினிப் போட்டு அப்படி ஒருவேளை கொஞ்சம் உணவு கொண்டு போனாலும் அதைப் பெறப் பட்டினியில் இருப்பவர்கள் முட்டி மோதி முயற்சிக்கும் போது அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி இஸ்ரேல் ஆயிரக் கணக்கானவர்களை கொள்வது வாடிக்கையாகி விட்டது. இது டிரம்புக்குத் தெரியாதா? இதுவரை 20,000 குழந்தைகள் கொல்லப்பட்டதாக ஐ.நா கூறியிருக்கிறது. விலங்குகளில் கூட புலி பசியால் துடிக்கும் நாய்க்குட்டிக்கு பால் கொடுப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் டிரம்பும் நெதன்யாகும் மனித ஜென்மங்களா?

இந்த அநியாயம் வேறு எங்காவது நடக்குமா? டிரம்ப் யோக்கியதை உலகுக்குத் தெரியாதென்று பொய்களையும் பேசி மிரட்டலும் விடுக்கிறார். இந்த லட்சணத்தில் டிரம்புக்கு நோபல் பரிசு தர வேண்டுமாம் சில நாடுகளின் தலைவர்களையும், தன் நாட்டு செய்தி தொடர்பாளரையும் பேச வைத்துள்ளார். இந்தியா இதை ஆதரிக்கக் கூடாது. சீனாவைப் போல் அமெரிக்காவை எதிர்த்துப் பேச வேண்டும். வரி விதித்தால் பொருளாதாரம் பெரிய அளவிற்கு பாதிப்படையாது.

தமிழ்நாடு முதல்வர் பொருளாதாரத்தில் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கியவர். 14 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக பொருளாதாரத்தை இந்தியப் பொருளாதாரத்தை விட உயர்த்திய பெருமைக்குரியவர் எங்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆவார். பிரதமர் மோடியே உங்களுக்கும் பொருளாதாரத்தை உயர்த்திட வழி சொல்வார். மோடி அவர்களே இந்திய நாட்டிற்கு தேவையானதை துணிந்து செய்யுங்கள். நாடு முக்கியம். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை தற்போது மோடிக்கு நினைவூட்டுகிறோம். வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும், நாடு இருந்தால்தான் கட்சி நடத்த முடியும்" பிரதமர் மோடியும் ஆட்சியில் இருக்க முடியும். பிரதமர் மோடியே பதறாதீர்கள். தமிழ் நாடு முதல்வரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது எப்படி என்று கற்றுக் கொள்ளுங்கள். எவ்வளவு பலமிக்கப் பகையையும் பந்தாடிக் காட்டலாம்.

## நாட்டில் தொடர்ந்து ஏற்படும்

# ரயில் விபத்துக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 13 - பாராளுமன்ற மாநிலங்களவையில் கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் கலந்து கொண்டு 2024-25 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மொத்த ரயில் விபத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு ? அவற்றுள் தடம் புரண்டது, மோதல்கள் மற்றும் லெவல் கிராசிங் விபத்துகள் குறித்தும், இந்த விபத்துகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் விரிவான விவரங்கள், இறப்பு மற்றும் காயங்களின் துல்லியமான எண்ணிக்கை பற்றியும்,

ரயில்வே சொத்துக்களுக்கு ஏற்பட்ட நிதி சேதங்கள் என்ன ? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்துப் பேசிய ஒன்றிய ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஸ்ரீ அஸ்வினி வைஷ்ணவ்,

இந்திய ரயில்வேயில் பாதுகாப்புக்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பல ஆண்டுகளாக எடுக்கப்பட்ட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாக, விபத்துகளின் எண்ணிக்கையில் பெருமளவு குறைந்துள்ளது.

2014-15 ஆம் ஆண்டில் 135 ஆக இருந்த ரயில் விபத்துகள், 2024-25 ஆம் ஆண்டில் 31 ஆகக் குறைந்துள்ளது.

2004-14 ஆம் ஆண்டில் 1711 (ஆண்டுக்கு சராசரியாக 171) ஆக இருந்த ரயில் விபத்துகள், 2024-25 ஆம் ஆண்டில் 31 ஆகவும், 2025-26 ஆம் ஆண்டில் (ஜூன் வரை) மேலும் 3 ஆகவும் குறைந்துள்ளது .

மனித செயல்பாடுகளின் காரணமாக ஏற்படும் விபத்துகளை குறைக்க 30.06.2025 வரை 6,635 நிலையங்களில் மையப்படுத்தப்பட்ட செயல்பாட்டு புள்ளிகள் மற்றும் சிக்னல்களுடன் கூடிய மின்/மின்னணு இடைப்பூட்டு அமைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

குறுக்கு வாயில்களில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக 30.06.2025 வரை 11,096 நிலை குறுக்கு வாயில்களில் நிலை குறுக்கு வாயில்கள் இடைப்பூட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. 30.06.2025 வரை 6,640 நிலையங்களில் மின்சா ரத்தால் பாதை ஆக்கிரமிப்பை சரிபார்ப்பதன் மூலம் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் நிலையங்களின் முழுமையான பாதை சுற்று வசதி வழங்கப்பட்டுள்ளது.

கவாச் என்பது மிகவும் தொழில்நுட்ப ரீதியாக தீவிரமான அமைப்பாகும், இதற்கு மிக உயர்ந்த பாதுகாப்பு சான்றிதழ் தேவைப்படுகிறது. கவாச், ஜூலை 2020 இல் ஒரு தேசிய ATP அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தெற்கு மத்திய ரயில்வே மற்றும் வட மத்திய ரயில்வேயில் 1548 ஆர்கேஎம்மில் கவாச் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, டெல்லி மும்பை மற்றும் டெல்லி ஹவுரா வழித்தடங்களில் (தோராயமாக 3000 ஆர்கேஎம்) பணிகள் நடந்து வருகின்றன. 30.07.2025 அன்று கோட்டா-மதுரா பிரிவில் (டெல்லி-மும்பை பாதை) 324 வழி கிலோ மீட்டர்களை உள்ளடக்கிய கவாச் வெற்றிகரமாக இயக்கப்பட்டது.

சிக்னலிங் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்த விரிவான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கட்டாய கடித சரிபார்ப்பு, மாற்றும் பணி நெறிமுறை, நிறைவு வரைபடத்தை தயாரித்தல் போன்றவை வெளியிடப்பட்டுள்ளன.

நெறிமுறையின்படி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களுக்கான துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு முறை மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்வண்டி ஓட்டுநர்களின் விழிப்புணர்வை மேம்படுத்த அனைத்து இன்ஜின்களிலும் விஜிலென்ஸ் கண்ட்ரோல் சாதனங்கள் (VCD) பொருத்தப்பட்டுள்ளன. மின்மயமாக்கப்பட்ட பிரதேசங்களில் சிக்னல்களுக்கு முன் இரண்டு OHE மாஸ்ட்கள் அமைந்துள்ள மாஸ்டில் ரெட்ரோரிஃப்ளெக்டிவ் சிக்மா பலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

பனிமூட்டமான வானிலை காரணமாக தெரிவுநிலை குறைவாக இருக்கும்போது முன்னால் உள்ள சிக்னல் குறித்து எச்சரிக்கும் விதத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன. மூடுபனியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள லோகோ பைலட்டுகளுக்கு ஜிபிஎஸ் அடிப்படையிலான மூடுபனி பாதுகாப்பு சாதனம் (FSD) வழங்கப்படுகிறது, இது லோகோ பைலட்டுகள் சிக்னல்கள், லெவல் கிராசிங் வாயில்கள் போன்ற நெருங்கி வரும் அடையாளங்களின் தூரத்தை அறிய உதவுகிறது.

பாதை தரவுத்தளம் மற்றும் முடிவு ஆதரவு அமைப்பு, பகுத்தறிவு பராமரிப்புத் தேவையை முடிவு செய்வதற்கும் உள்ளீடுகளை மேம்படுத்துவதற்கும் ஆன்லைன் கண்காணிப்பு அமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ரயில் பாதை, நடைபாதை தடுப்பு, பணித்தள பாதுகாப்பு, பருவமழை முன்னெச்சரிக்கைகள் போன்ற தண்டவாளப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்த விரிவான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாதுகாப்பான ரயில் இயக்கங்களை உறுதி செய்வதற்காக ரயில்வே சொத்துக்களின் (பணிப்பெட்டிகள் மற்றும் வேகன்கள்) தடுப்பு பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. வழக்கமான ICF வடிவமைப்பு ரயில் பெட்டிகளை LHB வடிவமைப்பு ரயில் பெட்டிகளுடன் மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அகலப்பாதை (BG) பாதையில் உள்ள அனைத்து ஆளில்லா லெவல் கிராசிங்குகளும் ஜனவரி 2019க்குள் அகற்றப்பட்டுள்ளன.

இந்திய ரயில்வே அனைத்து ரயில் பெட்டிகளிலும் பயணிகளுக்குத் தேவையான தகவல்களை வழங்க சட்டப்பூர்வ "தீ அறிவிப்புகளை" வெளியிட்டுள்ளது. தீ விபத்துகளைத் தடுக்க பல்வேறு செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து பயணி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் தீ விபத்து சுவரொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. தீ விபத்துகளைத் தடுக்க தீ விபத்து ஏற்படாமல் இருக்க, வெடிபொருட்களை எடுத்துச் செல்லக்கூடாது, ரயில் பெட்டிகளுக்குள் புகைபிடிப்பதைத் தடை செய்ய வேண்டும், அபராதம் விதிக்க வேண்டும் போன்ற செய்திகள் இதில் அடங்கும். புதிதாக தயாரிக்கப்பட்ட மின்சார ரயில் பெட்டிகள் மற்றும் சரக்கரை ரயில் பெட்டிகளில் தீ கண்டறிதல் மற்றும் அடக்கும் அமைப்பை உற்பத்தி அலகுகள் வழங்குகின்றன. புதிதாக தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகளில் தீ மற்றும் புகை கண்டறிதல் அமைப்பையும், மண்டல ரயில்வேக்கள் படிப்படியாக தற்போதுள்ள ரயில் பெட்டிகளில் படிப்படியாகப் பொருத்தும் பணியும் நடைபெற்று வருகிறது.

ஊழியர்களுக்கு வழக்கமான ஆலோசனை மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது. உற்பத்தி அலகுகள் புதிதாக தயாரிக்கப்பட்ட பவர் கார்கள் மற்றும் பேன்ட்ரி கார்களில் தீ கண்டறிதல் மற்றும் அடக்கும் அமைப்பையும், புதிதாக தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகளில் தீ மற்றும் புகை கண்டறிதல் அமைப்பையும் வழங்குகின்றன.

தற்போதுள்ள ரயில் பெட்டிகளில் படிப்படியாக அவற்றைப் பொருத்தும் பணியும் மண்டல ரயில்வேக்களால் நடைபெற்று வருகிறது.

ஊழியர்களுக்கு வழக்கமான ஆலோசனை மற்றும் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்திய ரயில்வேயில் ரோலிங் பிளாக்கின் கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது (திறந்த கோடுகள்) பொது விதிகள்

30.11.2023 தேதியிட்ட வர்த்தமானி அறிவிப்பின் படி, ஒருங்கிணைந்த பராமரிப்பு / பழுதுபார்ப்பு / சொத்துக்களை மாற்றுதல் பணிகள் 52 வாரங்களுக்கு முன்பே ரோலிங் அடிப்படையில் திட்டமிடப்பட்டு

திட்டத்தின்படி செயல்படுத்தப்படுகின்றன.

சிறந்த பராமரிப்பு நடைமுறைகள், தொழில்நுட்ப மேம்பாடுகள், சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் ரோலிங் ஸ்டாக் போன்றவை தொடர்பான பாதுகாப்பு தொடர்பான பணிகளின் விவரங்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன என பதிலளித்தார்.

## சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட

# தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் கருப்பூர் டி.பூபாலன் மறைவு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் இரங்கல்!



சேலம், ஆக. 13 - சேலம் ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட அறங்காவலர் நியமனக் குழு தலைவராகவும் தொ.மு.ச. மாவட்ட தலைவராகவும், கருப்பூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் சிறப்பாக இயக்கப் பணியாற்றிய கருப்பூர்.டி.பூபாலன் (வயது 72) அவர்கள் மறைவு நமது இயக்கத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மத்திய மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான இரா,இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வை. பெருமாள்

## ஆகஸ்ட் 13 (2001)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்.

தளபதி அவர்கள் தலைமையில் குடிநீர் பிரச்சினைக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2001 ஜூன் மாதத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அ.தி.மு.க. அரசு காவல்துறை காட்டுமிராண்டித்தனமான முறையில் கைது செய்ததைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் தொழிலாளர் அணிக்கு தலைமை தாங்கி முழக்கமிட்டு சென்றபோது மயக்கமுற்றார். அதுவே அவரது கடைசி பயணமானது.

"பொதுவாக அவருடைய வடிவம் ஆஜானுபாகுவான உருவம். புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், தி.மு.கழகத்தினுடைய "பீமசேனன்" வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த உருவமா சாய்ந்துவிட்டது என்று நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன். ஏங்கியேங்கித் தவித்தேன்" என தலைவர் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.